திருவள்ளுவர் ஆண்டு 1980 மாசி 8

சென்னை, 19—2—49

25

கழகக் கிளர்ச்சியின் விளைவு!



இந்துமத ஆலயங்களில் நடைபெறும் திருட்டு, கொள்ளை, புரட்டு, பித்தலாட்டம், கொடுமை முதலியவற்றை திராவிடர் கழகம் நெடுங்காலமாக, வன்மையாகக் கண்டித்து வந்திருக்கிறது. இப்போது ஓமந்தூர் சர்க்கார் அக் கொடுமைகளைக் களைவதற்காக அறநிலையப் பாதுகாப்புச் சட்டத் திருத்த மசோதா கொண்டுவந்திருப்பது கழகக் கிளர்ச்சியின் நல் விளைவு அல்லாமல் வேறென்ன?

★

தப்பி ஓடிய தம்பதிகள்

★

"கண்ணாளா, இனி நம் கதி என்ன, அமெரிக்காவிற்கு ஓடிவிட வேண்டியதுதானா?"

"அமெரிக்காவிற்கா, ஓடிவிடுவதா? ஏன்?"

"ஏனா? ஒன்றுமே தெரியாதது போல் கேட்கிறீரே! இன்னும் சில நாட்கள் நாம் இங்கே இருந்தால் என்ன ஆகும் தெரியாதோ?"

"என்ன ஆகும்? உயிர்போகும்! அவ்வளவுதானே!"

"ஓஹோ, விளையாடத் தொடங்கிவிட்டீரோ? வேதனை, உள்ளத்தை வாட்டும் நேரத்தில் விளையாடவும் முடிகிறதே உம்மால்! இதனை நான் என்னென்பது!"

"விளையாடுகிறேனா, நானா, மெய்யாகவா, மெய்யாகவா **மே-லிங்**? ......மெய்யாகவேதானா...... ஆம்! நீ சொல்வது உண்மை! நான் விளையாடத்தான் செய்கிறேன்! கால் நூற்றாண்டுக் காலத்திற்கு மேலாகவே இந்தப் பரந்த பூபாகத்தை ஆட்டிப்படைத்த அஞ்சாத நெஞ்சன் சியாங் விளையாடத்தான் செய்கிறான்! பொது வாழ்க்கைத் தீயில் குதித்த முதல் நாளிலிருந்து இன்றுவரை போர் போர் போர் என்று விடாது இடிமுழக்கம் எழுப்பிவந்த சிங்கக்குரல் படைத்த தீரன் சியாங் இப்போது விளையாடத்தான் செய்கிறான்!..... ..."

"கண்ணாளா, ஏதேதோ பேசுகிறீரே........."

"இல்லை! ஏதும் பேசவில்லை! உண்மையைத்தான் கூறுகிறேன்! விளையாடுகிறேன் நான்! மெய்தான் அது! மாவீரர் சன்—யாட்—சென் மறைந்த நாளிலிருந்து இன்றுவரை நான் விளையாடிக்கொண்டுதான் இருக்கிறேன்! முதலிலே நான்கைந் தாண்டுகள் அந்த வெறிபிடித்த வடக்கித்திய சேனாதிபதிகளுடன் விளையாடினேன்! பிறகு ஒரு பத்தாண்டுகாலம் **அந்த *குங்—சான்—டாங்குகளுடன்** விளையாடினேன்! அப்புறம் அந்த ஜப்பானியர்களுடன் சில ஆண்டுகள் விளையாடினேன்! மீண்டும் அந்த குங்—சான் டாங்குகளுடன் விளையாடினேன்! இப்போதோ மரணத்துடன் விளையாடுகிறேன்! போர்! போர்! போர்! —என் வாழ்க்கை முழுவதுமே இந்த விளையாட்டுத்தான்! **மே—லிங்**! நீசொன்னது முற்றிலும் உண்மை! நான் விளையாடுகிறேன்! வேதனை நிரம்பிய இந்த வினாடியிலும் நான் விளையாடுகிறேன்! என் கழுத்துக்குக் கயிறு வீசிவிட்டார்கள் அந்த **குங்—சான்—டாங்குகள்**—அதை நன்றாகத் தெரிந்திருந்தும் விளையாடுகிறேன்! ...."

"கண்ணாளா............"

"கண்ணாளன் என்று சொல்லாதே என்னை! கசடன் என்று சொல்லு! கயவன் என்று சொல்லு! மக்கள் நன்மையை மனதிற்கொள்ள மறுத்த மதோன்மத்தன் என்று சொல்லு! சீமான்களையும் சுகபோகிகளையும் நம்பி ஏழை மக்களைக் கைவிட்ட எத்தன் என்று சொல்லு! என் நாட்டுப் பாட்டாளி மக்களின் கரத்திலே உள்ள ஜீவ சத்தியை நம்பாமல் அமெரிக்க நாட்டு டாலரில் உள்ள மினுமினுப்பைக் கண்டு மதிமயக்கிப்போன முரடன் என்று சொல்லு! அற்பன், அதிகாரப் பித்து ஏறியவன், ஆணவப்புத்தி கொண்டவன், ஜனநாயகவிரோதி. டாலர் ஏகாதிபத்தியத்தின் செல்லப்பிள்ளை என்று எதையேனும் கூறு! ஆனால் கண்ணாளன் என்று மட்டும் கூறாதே;..."

"கண்ணாளா......"

"மீண்டும் அதே வார்த்தையா! **மே-லிங்**! வேண்டாம்!"

"அந்தோ! விபரீதமாகப் பேசுகிறீரே, என் செய்வேன் நான்!"

"விபரீதமாகவா பேசுகிறேன்! ஆம், விபரீதமாகத்தான் பேசுகிறேன்! வேதனை மிகுந்தால் விபரீதந்தானே பிறக்கும்?"

"இப்படிப் பேசிக்கொண்டே இருந்தால்......"

"வேறென்ன செய்யவேண்டும் என்கிறாய்? வேறென்ன இருக்கிறது செய்வதற்கு?"

"நாம் தப்பி ஓடவேண்டாமா?"

"எங்கே போவது?"

"அமெரிக்காவிற்கு!"

"அமெரிக்காவிற்கா? அது முடியாது! நாம் எவ்வளவு உதவி செய்தோம் அவர்களுக்கு? நன்றி காட்டினார்களா அவர்கள்? டாலர்

* குங்—சான்—டாங்: சீனநாட்டு கம்யூனிஸ்ட் கட்சியின் பெயர். குங்—சான்—டாங்குகள்: சீன கம்யூனிஸ்டுகள்.

ஏகாதிபத்தியம் இங்கே வேரூன்றுவதற்கு, அமெரிக்க முதலாளித்துவம் இங்கே ஆல்போல் தழைப்பதற்கு, அவர்களுடைய பிடியிலே சீனாவை சிக்கவைப்பதற்கு நான் எவ்வளவு பாடுபட்டிருக்கிறேன்! துளி நன்றி! காட்டினார்களா? நாம் உயிருக்கு ஊசலாடிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் தம் சுண்டுவிரலையேனும் அசைத்தார்களா அத் துரோகிகள்? நீ போனாயே ஆபத்துக் காலத்தில் அவர்கள் ஆதரவைத் தேடிக்கொண்டு? சரியாக முகம் கொடுத்தாவது பேசினார்களா உன்னோடு? நான் அதிகாரபீடத்தில் இருந்தபோது நம்மை எவ்வளவு புகழ்ந்தார்கள். நம்மிடமிருந்து எவ்வளவு காரியம் சாதித்துக் கொண்டார்கள், நம் துணை கொண்டு தங்கள் வியாபாரத்தை எவ்வளவு பெருக்கிக் கொண்டார்கள்? ஆனால் இன்று—? அவர்களைத் தேடிக்கொண்டு நீயாகச் சென்றாலும் 'ஏன்' என்று கேட்கவும் மறந்துபோன "மகா உத்தமர்கள்" அல்லவா அவர்கள்! அத்தகைய நயவஞ்சகர்கள் வாழும் நாட்டிற்கா என்னை அழைக்கிறாய்?"

"ஆசைகாட்டி மோசம் செய்த அற்பர்கள் நிறைந்த நாடுதான் அது. ஆனால் அதற்காக, இங்கேயே கிடந்து, **யுத்தக் குற்றவாளிகள்** என்று பழி சுமத்தப்பட்டு, கூண்டிலே ஏற்றப்பட்டு தூக்கு மரத்திலே தொங்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமைக்கு நாம் உள்ளாக வேண்டும் என்கிறீரா?"

"இல்லை, இங்கிருந்து அமெரிக்காவுக்குத் தப்பியோடி விடுகிறோம் என்றே வைத்துக்கொள்! அங்கே நமக்குள்ள ஏராளமான சொத்தை வைத்துக் கொண்டு சுகபோகமாக காலங்கழிக்கிறோம் என்றே வைத்துக் கொள்! நாளை சீனா முழுவதிலும் **சூங்-சான்-டாங் சர்க்கார்** ஏற்பட்டு, அமெரிக்கா, அதை ஒப்புக் கொண்டு, தன் தூதுவர்களை அச் சர்க்காருக்கு அனுப்பி வைத்தால், அப்போது. அமெரிக்கா, நம்மை அந்த **சூங்-சான்-டாங்**குகளிடம் ஒப்படைக்காது என்பது என்ன நிச்சயம்?

"நிச்சயமில்லைதான்......"

"நிச்சயமில்லாத இந் நிலையில் அமெரிக்காவுக்குப் போவதைவிட இங்கேயே இருப்பது மேல் அல்லவா?"

"மேல்தான்! நிச்சயமாக மேல்தான்! ஆசைகாட்டி மோசம் செய்த அமெரிக்க குபேரர்களுக்கிடையே வாழ்வது உள்ளத்தை வாள்கொண்டு அறுப்பதுபோல் வேதனை தரும் சம்பவமாகத்தான் இருக்கும்! உண்மையே நீங்கள் சொல்வது! ஆனால் ஒன்று! அமெரிக்காவைத் தவிர வேறு நாடுகளே கிடையாதா இந்தப் பரந்த உலகத்தில்? நமக்குப் பொருத்தமான வேறு ஏதேனும் ஒரு நாட்டிற்குப் போனால் என்ன?"

"**மே-லிங்**! நீ சொல்வது நல்ல யோசனை! போய் ஒரு அட்லாசைக் கொண்டுவா, எந்த நாடு நமக்கு ஏற்றதாக இருக்கும் என்று பார்க்கலாம்..."

"அட்லாஸ் தானே, இதோ கொண்டு வருகிறேன்."

* * *

இந்த உரையாடல் முற்றிலும் கற்பனை! ஆனால் உரையாடல் கற்பனையே தவிர நடந்திருக்கக் கூடாததல்ல, நடக்க முடியாததுமல்ல! இதே வாசகங்களாக இல்லா விட்டாலும், இதே பாணியில் அமைந்திராவிட்டாலும், ஏறத் தாழ இது போன்றதோர் உரையாடல், சீனத் தலைநகர் **நாங்கிங்**கிலிருந்து தப்பி ஓடி, தெற்கு சீனாவில், உள் நாட்டில், எங்கோ ஒரு கிராமத்தில் மறைந்து வாழும் சியாங்-கே-ஷேக் தம்பதிகளுக்கிடையே, நிச்சயம் நடைபெற்றே இருக்கும்!

சியாங்-கே-ஷேக், ஏறத்தாழ கடந்த இருபத்தைந்தாண்டுகளாக, சீன நாட்டின் சர்வாதிகாரியாக இருந்து, அந்த நாட்டை, தன் மனம் போன போக்கில் உலக அரசியல் சதுரங்கத்தில் உருட்டிவந்தவர். **மே-லிங்-சூங்**, அவருடைய மனைவி; மேடம் சியாங் கே ஷேக் என்று பிரபலமாக அழைக்கப்படுபவர். மூன்று வாரங்களுக்கு முன்னால், இவ்விருவரும் நாங்கிங்கிலிருந்து தப்பி ஓடிவிட்டனர். தப்பி ஓடிய தம்பதிகள் தங்களுக்குள்ளே பேசிக்கொண்டிருக்கக்கூடிய உரையாடலே நாம் மேலே பொறித்திருப்பது.

சீனா என்றவுடனே நமக்கு சியாங்-கே-ஷேக்கின் பெயர் தான் கவனத்துக்கு வரும்; இப்படி, சீனா, சியாங்கே ஷேக் இந்த இரண்டு பெயர்களிலே எதாவது ஒன்றை எண்ணினால் அது மற்றொன்றை தவறாமல் இழுத்துவந்து நம் மனத்திரையில் நிறுத்துவதற்குக் காரணம், சியாங்கே ஷேக் தான் சீனா, சீனாதான் சியாங் கே ஷேக் என்ற நினைப்பு, கருத்து, எண்ணம், எப்படியோ நம் உள்ளத்தில் நீண்ட நாட்களாகப் புதைந்துபோய் இருப்பதுதான்! ஆனால் அந்த நினைப்பு, உண்மையின் உருவம் அல்ல! தவறான பிரசாரத்தின் விளைவு! சியாங் கே ஷேக்கின் கரத்திலே சீன நாட்டு அதிகார பலம் அவ்வளவும் குவிந்துகிடந்தது இத்தனை ஆண்டுகளாக! அவர் இட்டது சட்டம், அவர் சித்தம் பிறர் பாக்கியம் என்ற நிலையே சீனாவின் பெரும் பகுதியில் இதுவரை இருந்துவந்தது. சர்க்காரும், சர்க்காருக்குள்ள பிரசார சாதனங்கள் எல்லாமும் சியாங்-கே-ஷேக் வசத்திலேயே இருந்தன. எனவே வெளி உலகத்தை அவரால் எளிதில் ஏமாற்ற முடிந்தது—அவர் ஒருவர்தான் சீனாவில் உள்ள மிகப் பெரிய சக்தி, பலம்பொருந்திய சக்தி என்ற எண்ணம் உலகெங்கும் பரவலாயிற்று. இந்த தவறான எண்ணத்தை வேண்டுமென்றே வளர்த்துவந்தனர் பிரிட்டிஷ் அமெரிக்க முதலாளிகள்! காரணம், சியாங் கே ஷேக் அதிகார பீடத்திலே அமர்ந்திருப்பது சீனாவைச் சுரண்டுவதற்கு அவர்களுக்கு ஏராளமான வசதிகளை அளித்தது. "சியாங் சிங்கம் உள்ள வரையில் நம் சுரண்டல் தத்துவத்திற்கு ஜெயமுண்டு பயமில்லை மனமே" என்று அவர்கள் சித்தம் களித்தனர்—எனவே சியாங்கின் புகழ் அவனி எங்கும் பரவலாயிற்று. "சீனாவே சியாங்-கே-ஷேக், சியாங்-கே-ஷேக்கே சீனா" என்ற இந்த தவறான கருத்து, சியாங் தன் பிரசார பலத்தாலே உலக மன்றத்தில் எழுப்பிவந்த இந்த மாறான எண்ணம், வெள்ளை முதலாளிகளின் தன்னலத் தீயிலே கொழுந்துவிட் டெரிந்த இந்த பொய்ப் பிரசாரம், அண்மையில் நடைபெற்ற உலகப் பெரும் போரின்போது மிக அதிகமான

(10-ம் பக்கம் பார்க்க)

அவர்களே தான்---இப்போதும்!

"ஏறத்தாழ ஓர் ஆண்டுக்கு முன்னால் சென்னை புரசை வாக்கம் பள்ளி மைதானத்தில் நண்பர்கள் C N· அண்ணா துரை, ப. ஜீவாநந்தம், ம. பொ. சிவஞானம் ஆகியோரை சொற்பொழிவாளர்களாகக் கொண்டு, அப்போது சட்ட சபையில் கொண்டுவரப்பட்டிருந்த இனாம் ஜமீன் ஒழிப்பு மசோதாவை ஆதரிப்பதற்காக ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் கூட்டினேன். அப்போது யார் யார் அந்த மசோதாவை எதிர்த்து நின்றார்களோ, யார் யார் அந்த மசோதா நிறைவேறினால் இந்து மதமே அழிந்துவிடும் நமது புராதன தர்மமே சிதைந்துவிடும் என்றெல்லாம் போலிக் கூக்குரல் எழுப்பினார்களோ, யார் யார் உழவர்களின் முன்னேற்றத்திற்காகக் கொண்டுவரப்பட்ட அந்த திட்டத்திற்குப் பலமான முட்டுக்கட்டை போட்டார்களோ, அவர்களேதான், அந்தச் சிறு கூட்டத்தாரேதான், அந்தச் சின்னஞ்சிறு கும்பலேதான், இப்போதும், இந்த மடாலயத் திருத்த மசோதாவையும் எதிர்க்கிறார்கள் என்பதைக் காண்கிறேன், மிக மிக வேதனைப்படுகிறேன்."

—சென்னை மாவட்ட காங்கிரஸ் துணைத்தலைவர் **தோழர் டி. பி. பாலகிருஷ்ணன்** இதுபோலப் பேசியிருக்கிறார் சென்ற கிழமை சென்னையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில்! இவைபோன்ற வாசகங்களை, இவற்றைவிட காரமான வாசகங்களைக்கூட சுயமரியாதைக்காரர்களாகிய நாம் எத்தனையோ முறை பேசியிருக்கிறோம் ஆகவே இந்த வாசகங்கள் அல்ல முக்கியம், இந்த வாசகங்களைக் கூறியிருப்பவர் ஒரு காங்கிரஸ்காரர், அதுவும் சாதாரண நாலணா உறுப்பினர் அல்ல, பொறுப்புள்ள பதவியில் இருப்பவர், சென்னை மாவட்ட காங்கிரஸ் துணைத்தலைவர், ஆகவே அவர் ஏனோதானோ என்று பேசியிருக்க முடியாது, தான் பேசுகின்ற ஒவ்வொரு வாசகத்தையும் எண்ணி எடைபோட்டுப் பார்த்து, அதன் முழுப்பொருளையும் நன்குணர்ந்து பார்த்து, "இந்த வாசகங்களிலே அந்தப் பொல்லாத திராவிட கழகத்தார் களிப்புறுவதற்கான கருப்பொருள் ஏராளமாக இருக்கிறதே! இதை அவர்கள் பயன்படுத்திக் கொள்வார்களே! ஒரு ஜில்லா காங்கிரஸ் தலைவரே இப்படிப் பேசியிருக்கிறார் என்பதை தங்கள் பத்திரிகையில் பெரிய எழுத்தில் எடுத்துப் போட்டுக் காட்டுவார்களே!" என்பதையெல்லாம் நீள நினைத்துப் பார்த்து, "அவர்கள் அப்படிப்பயன்படுத்திக் கொண்டாலும் கவலையில்லை, உண்மையை எத்தனை நாளைக்குத்தான் மறைத்து வைப்பது, மறைத்து வைப்பது மேலும் மேலும் கெடுதியாகத் தானே முடிகிறது, நாம் ஆரிய மாயையின் சேட்டைகளை மறைத்துவைக்க வைக்க "அதுகளின்" சேட்டைகள் அதிகமாகிக் கொண்டுதானே போகின்றன, ஆகவே இனி மறைப்பதில் பயனில்லை, உண்மையை உரைத்தே தீரவேண்டும்" என்ற திட்டமான முடிவுக்கு வந்து, "பாலகிருஷ்ணனுக்கும் ஈரோட்டு ஞானஸ்நானம் ஆகிவிட்டதோ என்று வைத்தியநாதர்களும் வரதாச்சாரிகளும் கேலி பேசுவார்கள், பெருந்தலைவர்களிடம் சாடி சொல்வார்கள், குப்புறக் கவிழ்த்துவிட பின்னாலே பெருங்குழி தோண்டுவார்கள், என்றாலும் அச்சமில்லை! உண்மையைச் சொல்லாமல் இருப்பதில்லை!" என்ற திடசித்தத்தோடுதான், தோழர் பாலகிருஷ்ணன் இந்த வாசகங்களைக் கூறியிருக்க வேண்டும், ஆகவேதான் இந்த வாசகங்கள் மிக மிக முக்யத்துவம் வாய்ந்தவை என்று நாம் கருதுகிறோம். காங்கிரஸ் திராவிடர் உள்ளத்திலே திராவிட இன உணர்ச்சி கொழுந்து விட்டெரியத் தொடங்கிவிட்டது என்பதற்கான அத்தாட்சிப் பத்திரம் இந்தச் சொற்பொழிவு! திராவிடர் கழகம் பார்ப்பனரல்லாதாருக்கு என்ன சாதித்துவிட்டது என்று கேட்கிறாரே காமராஜர் அவர் இந்தச் சொற்பொழிவைப் படித்துப் பார்க்கட்டும்! பிறகு கூறட்டும் திராவிடர் கழகம் என்ன சாதித்திருக்கிறது என்னும் உண்மையை!

அவர்களேதான், இப்போதும்!— இரண்டு சொற்கள் அல்ல இவை, திராவிடக் கழகத்தாருக்கு வேறு வேலை இல்லையா, எப்போது பார்த்தாலும் பார்ப்பனரைத் தாக்குவது தானா அவர்களுக்கு வேலை என்று கேட்பதுண்டல்லவா சில கருத்திழந்த கபோதிகள், அவர்கள் முதுகுக்கு அல்ல, உள்ளத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள இரண்டு கசையடிகள் இவை!

அவர்களேதான் இப்போதும்! அவர்கள்தான் புரோகிதத்வத்தின் கடனாசாலையாக இருக்கும் இனாம்களும் முதலாளித்வ வளர்ப்பு நிலையங்களாகிய ஜமீன்களும் ஒழியக்கூடாது என்று தொண்டை கிழியக் கத்தியவர்கள், அவர்களேதான் இப்போது மடாலயங்களில் காணப்படும் ஊழல்களும் கொடுமைகளும் ஒழியவேண்டும் என்று நாம் சொன்னால் கூடாது என்று கூவுகிறார்கள்! முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருந்தவர்கள் அப்போது அவர்கள்! இப்போதும், அவர்களேதான்!

அவர்களேதான் இப்போதும்! என்கிறார் பாலகிருஷ்ணன்! இல்லை, எப்போதுமே அவர்கள்தான் என்கிறார் **முதலமைச்சர் இராமசாமியார்!** அப்போது இனாம் ஒழிப்பு மசோதா வந்தபோதும இப்போது மடாலயத் திருத்த மசோதா வந்துள்ளபோதும் மட்டும்தானா அவர்கள் ப[illegible] சாங்கக் கட்டைக் கையில் ஏந்[illegible] கொண்டு, முப்புரி நூலை உ[illegible] வண்ணம், தொந்தி வயிற்[illegible] தடவிய வண்ணம், தர்ப்பை[illegible] தைச் சுழற்றிய வண்ணம், இந்[illegible] மித்திரனின் பக்க பல[illegible] முன்னேற்றத்தை முட்டித்தள்[illegible] வருகிறார்கள், இல்லை இல்லை, எப்போதுமே அவர்கள் செய்து[illegible] வது அந்தப் பத்தாம்பசலி வேலை தான் என்பதை முதல்வர் ஓம[illegible] தூரார் மிக நாசுக்காக, நயமா[illegible]

[9-ம் பக்கம் பார்க்க]

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

சித்திர நடையிலே புகல்வதானால், இந்தக் கருநாவல் பழத்தின் ருசியை, பெரும்பாலான காங்கிரஸ் திராவிடர்கள்—குறிப்பாக, பல எம்.எல்.ஏக்கள் நன்றாக அறிந்துகொண்டிருக்கின்றனர் என்பதைமட்டுமல்ல, இந்த நாவல் பழத்தை ஆசை தீரச் சுவைத்து இன்புற அவர்களிற் பலர் துடியாய்த் துடிக்கின்றனர் என்னும் உண்மையை, இந்த அறநிலைய மசோதாவின் காரணமாக காங்கிரஸ் கூடாரத்தில் மூண்டுள்ள போரும், இந்தப் போரில் வெடிக்கப்படும் பீரங்கி சப்தமும், அந்த சப்தத்தை ஒட்டி எழும் புகையும் நமக்கு நன்கெடுத்துக் காட்டிவிட்டன.

தோழர் வேலுசாமி குறிப்பிட்டுள்ள இந்த நாவல் பழம் தின்னத் தின்னத் தெவிட்டாத சுவைநிறைந்த செழுங்கனி என்பதோடு தமிழகத்தின் தீராத நோய்களையெல்லாம் தீர்த்துவைக்கும் அற்புதமான இயற்கை மருந்துமாகும். இந்த அரிய உண்மையை, ஆரியம், காங்கிரஸ் திராவிடரின் கண்களுக்குப் புலப்படாவண்ணம் இத்தனை ஆண்டுகளாக அடியோடு மறைத்துவந்ததோடு அல்லாமல், இந்த அரிய, இனிய, ஒப்பற்ற, தீஞ்சுவைக் கனியை கொடிய விஷ உருண்டை என்றும் திரித்துக் கூறி அவர்களிடையே விஷமப் பிரசாரமும் புரிந்து வந்தது—தைரியமாக! காங்கிரஸ் திராவிடர்களும் புனிதமான ஆரியம் கூறுவது பொய்யுரையாகவா இருக்கும் என்றே இதுவரை கண்ணை மூடிக்கொண்டு நம்பிவந்தனர், இப்போது தான் கொஞ்சம் கண் திறந்து பார்க்கின்றனர், நாவல் பழத்தை என்னவோ ஏதோ என்று பயந்து கொண்டே கொஞ்சம் கொஞ்சமாகச் சுவைத்துப் பார்க்கின்றனர். அதில் நஞ்சு துளியும் இல்லை என்பது தெரிகிறது, அதன் அற்புதமான சுவையும் புலப்படுகிறது, ஆரியம் இதுவரை புகன்றது அவ்வளவும் பொய்யுரை என்பதும் தெரிகிறது, இயல்பாக அவர்களின் ஆத்திரம் உண்மையை மறைத்துக் கூறிய "மறையவர்" கூட்டத்தின் மீது பாய்கிறது! சட்டசபையிலும் சரி, ஜலந்து மைதானத்திலும் சரி, கோகலே மண்டபத்திலும் சரி, காங்கிரஸ் திராவிட எம்.எல்.ஏக்கள், வைத்தியநாதர் கும்பலின்மீதும் அவர்களுடைய பரம்பரைக் கொடுமைகளின்மீதும் அவ்வளவு சீற்றத்தைக் காட்டினார்களே, அதற்குரிய காரணமே இதுதான்!

* * *

தோழர் வேலுசாமி ஜலார்த மைதானக் கூட்டத்திற்குப் புறப்பட்டுக்கொண்டிருக்கையில் யாரோ ஒரு "நண்பர்" அவரைப் பார்த்துக் கூறினாராமே "உமக்கு சொந்தத்தில் காங்கிரஸ் பேட்டை இல்லையா எதற்காக நீர் கருஞ்சட்டை பேட்டையில் சென்று பேசவேண்டும்" என்று. அவர் அறியவில்லை பாபம், காங்கிரஸ் திராவிட பேட்டைக்கும் கருஞ்சட்டை பேட்டைக்கும் இடையே இருந்த தூரம் இப்போது வெகுவாகக் குறைந்துவிட்டது என்னும் உண்மையை! "உமக்குத் தெரியாதய்யா அந்தக் கருநாவல் பழத்தின் ருசி" என்று தோழர் வேலுசாமி கூறியதற்கே திகைத்துவிட்டாராமே அந்த "நண்பர்", அவர் நாளை, காங்கிரஸ் திராவிட பேட்டையும் கருஞ்சட்டை பேட்டையும் தனித்தனியாக அமைந்திருப்பது வீண் செலவு. இவ்வளவு நெருக்கமாக அமைந்திருக்கும் இந்த இரண்டையும் தனித்தனியே அமைத்துக்கொண்டிருப்பதில் இரு சாரார்களின் நேரம் முயற்சி உழைப்பு எண்ணம் பொருள் ஆகியவற்றை வீணாக்கிக்கொண்டிருப்பதைவிட இருசாராருக்கும் இடம் இருக்கும் விதத்தில் ஒரே பேட்டையை கொஞ்சம் அகலமாக எழுப்பி விடுவதே நல்லது அதுவே இருவருக்கும் இலாபகரமானது என்னும் முடிவுக்கு இருபிரிவினரும்—அல்ல! அவர்களை இரு பிரிவினர் என்று கூறுவதே தவறு! இருவேறு இடங்களில் வாழும் ஓரின மக்கள் இருவரும் வர இருக்கிறார்களே, அப்போது அவர் என்ன செய்வாரோ தெரியவில்லை! ஒருக்கால் மூர்ச்சை அடைந்து கீழே விழுந்துவிடுவாரோ! பாபம், திராவிட இன எழுச்சி வெள்ளம் காங்கிரஸ் பாலத்தின்கீழ் எவ்வளவு வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறது என்பதையே அறியமுடியாத பழங்கால மனுஷர் போலிருக்கிறது அவர்!

———

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

ர்வமான எதிர்க்கட்சியாக நாங்கள் அங்கீகரிக்கப்படவேண்டும்" என்று பொதுவுடமைக் கட்சியினர் உலகப் போரின்போது சியாங் கே ஷேக்குக்கு தூது விடுத்தனர். ஆனால் அதைத் துச்சமென மறுத்துத் தள்ளினார் சியாங், "சர்வகட்சி ஆட்சியா அது கூடாது" என்று முழக்கமிட்டார். "சர்வ கட்சி சர்க்கார் வேண்டும்" என்பது மிக மிக நியாயமான கோரிக்கை. இதைக்கூட சியாங் ஒப்புக்கொள்ள மறுத்தார். காரணம், சர்வகட்சி சர்க்கார் வேண்டும் என்பதை ஒப்புக்கொண்டால், பிறகு, தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் வேண்டும் என்பதைஒப்புக்கொண்டாகவேண்டும், பிறகு வயதுவந்த எல்லோருக்கும் வாக்குரிமை என்பதையும் ஒப்புக்கொண்டாகவேண்டும், அப்படி ஒப்புக்கொண்டால் தன் கட்சி மண்ணிலிருந்து மறைந்துவிடும்—ஓட்டு அதற்குக் கிடைக்காது — பொதுவுடமைக் கட்சியினரே அதிகாரத்திற்கு வந்துவிடுவர்" என்று சியாங் பயந்தார். அந்தப் பயம் நியாயமானது! தேர்தல்மூலம் சட்டசபைப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து சர்க்கார் அமைப்பது என்ற குடியாட்சி முறையைப் பின்பற்றினால் சியாங்-கே-ஷேக்கின் கட்சிக்கு ஒரு ஓட்டுகூட கிடைப்பது அருமை! மக்கள் என்றாலே சியாங் எப்போதும் அச்சமடைந்து வந்தார். எனவேதான் சியாங் என்றாலே மக்கள் அருவருப்பு அடைந்தனர், ஆட்சிப் பீடத்திலிருந்து அவரை விரட்டியும் விட்டனர்.

தப்பி ஓடிய தம்பதிகள் இன்று எந்த நாட்டிற்குக் குடியேறுவது என்பதறியாது தத்தளித்துக்கொண்டிருக்கின்றனர், ஆனால் சீனப் பாட்டாளி மக்களோ புத்தம் புது வாழ்வு பெற்றுவிட்டோம் என்று எக்களித்துக் கொண்டிருக்கின்றனர்!

சீனா சிகப்பாகிவிட்டது! அதாவது பொதுவுடமை அங்கே பூத்துவிட்டது! இனி. விரைவில். சீனா, ஆசியாவின் நோயாளி என்ற பட்டத்தை உதறி எறிந்துவிட்டு. கீழ்நாடுகளின் எழுச்சிக் குரல் என்ற புது நிலையைப் பெற்றுவிடும்! ஐயமில்லை!

———

போர்வாள்

19—2—49 சனிக்கிழமை

நாவல் பழத்தின் ருசி!

★

"நான் இந்தக் கூட்டத்திற்குப் புறப்பட்டுக்கொண்டிருக்கும்போது ஒரு நண்பர் என்னைக்கண்டு விசித்திரமான ஒரு கேள்வி கேட்டார் 'நீ ஏதோ இந்த மடமசோதாவை ஆதரிக்கிறாய், அது சரியோ தப்போ அது உன் விருப்பம், ஆனால் இந்த மசோதாவை ஆதரித்துப் பேச உனக்கு காங்கிரஸ் மேடை எதுவும் இல்லையா? கேவலம் கருப்புச் சட்டைக்காரர்கள் மேடைதானா அகப்பட்டது?' இதுதான் அவர் கேட்ட கேள்வி. இந்தக் கேள்விக்கு நான் ஒரு பதில் கேள்வி போட்டேன் 'நண்பரே, கன்னங்கரேல் என்று இருக்கிற நாவல் பழத்திற்குள்ளே எவ்வளவு ருசி இருக்கிறது தெரியுமா?' இந்தப் பதிலை நான் தந்தவுடனே அந்த நண்பர் திகைத்தே போய் விட்டார்!"

காங்கிரஸ் எம். எல். ஏ. **தோழர் P. S. வேலுசாமி** தம் இதயம் எனும் கேணியிலிருந்து திராவிட உணர்ச்சி என்னும் நன்னீரை இந்த வாசகக் குவளைகள் மூலம் மொண்டு மொண்டு ஊற்றியபோது, அந்த இன்பப் புதுநீரிலே தவழ்ந்து தவழ்ந்து விளையாடிய அந்த ஆயிரமாயிரம் திராவிடர் உள்ளமும் இன்பத்தால் பூரித்துப் புளகாங்கிதம் அடையலாயின. வேலுசாமிகள் நாம் சற்றும் எதிர்பாராத இடத்திலிருந்தெல்லாம் புறப்படுகிறார்களே, இது என்ன அதிசயம் என்று மக்கள், **நண்பர் வேலுசாமி** இந்த வாசகங்களை வீசிக்கொண்டிருந்தபோது, ஒருவருடன் ஒருவர் பேசிக்கொள்ளலாயினர். காங்கிரஸ் எம். எல். ஏக்களே திராவிடர் கழக இலட்சியங்களின் ருசியை உணர்ந்துகொள்ளத் தொடங்கிவிட்டனர், இனி நமக்குக் கழக வேலை இல்லை, நாம் வேறு பணி புரியத் தொடங்கவேண்டியதுதான் என்று திராவிடர் கழக வீர வாலிபர்கள் பூரிப்புடன், கொஞ்சம் பெருமையுடன், ஓரளவு இறுமாப்புடன்கூட தங்களுக்குள்ளே சொற்களைப் பரிமாறிக்கொண்டனர், தம் அகத்திலே ஏற்பட்ட இன்பத்தை தம் முகத்திலே தவழும் புன்னகை மூலமும் தம் சொல்லிலே ஏறியுள்ள புது மெருகு மூலமும் காட்டிக்கொள்ளலாயினர். நம் பணி பலன் தரத் தொடங்கியிருக்கிறது என்ற மகிழ்ச்சி கலந்த பெருமித உணர்ச்சியும், இன்பம் தோய்ந்த திருப்தி நினைவும் அங்கந்த ஐலந்து மைதானத்தில் திரண்டு கூடியிருந்த திராவிடர் கழகத் தோழர்கள் எல்லோருடைய உள்ளத்திலும் ஆனந்த நடனம் புரியத் தொடங்கின.

சென்ற கிழமை சென்னை ஐலந்து மைதானத்தில் சென்னை அறநிலையப் பாதுகாப்பு மசோதாவை ஆதரிக்க ஒரு மாபெரும் கூட்டம்—கூட்டமா அது? அல்ல! மக்கட் கடல்—திரண்டு குழுமியிருந்தது. அதிலே பெரும் பகுதி திராவிடர் கழகத் தோழர்கள்! கூட்டத்திலே **தோழர்கள் கோசலராம், கன்னியப்பன், வேலுசாமி, பாலகிருஷ்ணன் முதலான காங்கிரஸ் எம். எல். ஏ.க்கள்** மசோதாவை ஆதரித்தும், அதை முழுமூச்சாக எதிர்த்து நிற்கும் முப்புரியாளரின் பொல்லாக்கான போக்குகளைத் தவிடு பொடியாக்கிய வண்ணமும் சொற்பொழிவாற்றினர். அவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது, அவர்கள் உண்மையிலே பேசுகிறார்களா அல்லது பெரியாரின் பேருரைகளை விடுதலை இதழிலிருந்து படிக்கிறார்களா என்ற ஐயம், எல்லோருக்குமே—எல்லோருக்கும் என்றால் அங்கு வந்திருந்த காங்கிரஸ் தோழர்களுக்குங்கூட, ஏற்பட்டது! அவர்கள், இந்து மடங்களும் கோவில்களும் உள்ள இழிநிலையை இடித்துக் காட்டியபோதும், அந்த இழிநிலை காரணமாக நாட்டிற்கு ஏற்பட்டுள்ள நஷ்டம் எவ்வளவு என்று கேட்டபோதும், கோயில் பெருச்சாளிகளும் மடாலயப் பூனைகளும் சமயத்தின் பெயரால் குவிந்துள்ள சொத்தை சூறையாடிக் கொண்டிருப்பதை இன்னும் எத்தனை நாட்களுக்கு அனுமதிக்க முடியும் என்று இடிமுழக்கம் எழுப்பியபோதும், இந்த மோசடியும் பித்தலாட்டமும் சுரண்டலும் சுகபோகமும் ஒழியக்கூடாதாமே, வைத்தியநாத வேதியர்களும் வஞ்சக வரதாச்சாரிகளும் கூவுகிறார்களே, இது நியாயமா என்று நம்மையே கேட்டபோதும், கைப்பிடி அளவுள்ள "இந்தச் சிறு கூட்டம்" இன்னமும் நம்மை தங்கள் கையிலே உள்ள கிழிந்த பஞ்சாங்கத்தைக்கொண்டே அடக்கியாள முடியும் என்றெண்ணுகிறதே இந்த ஆணவத்தை அடக்குவது நம் கடமை அல்லவா என்று நமக்கு ஏதோ நாம் மறந்துபோன கடமையை நினைப்பூட்டும் தோரணையில் உபதேசம் பல புரிந்தபோதும், "வைத்தியநாத அய்யரே! வாரும்! வரதாச்சாரியே வாரும்! பாஷ்யம் அய்யங்காரே வாரும்! அறநிலையத் திருத்த மசோதாவிற்கு மக்கள் ஆதரவு உண்டா என்று சட்ட மன்றத்தில் கொக்கரித்தீரே, இதோ பாரும் வெள்ளம்போல் திரண்டுள்ள மக்கட் பட்டாளத்தை, இப்போது கூறும் ஆதரவு யார் பக்கம் என்பதை!" என்று அறநிலைய மசோதாவாலே மதம் அழிந்துபோச்சு என்று காட்டுக் கூச்சல் எழுப்பும் சனபாடிகளை சவாலுக்கு அழைத்தபோதும், "தம் இனத்திற்கு ஆபத்து என்றால், தங்கள் சுரண்டலுக்கு அபாயம் என்றால், தங்கள் பித்தலாட்டங்களுக்கு ஒரு மரணதண்டனை என்றால் அந்தக் கூட்டம் தமக்குள்ளே இருக்கும் ஆயிரம் வேற்றுமைகளையும் மறந்துவிட்டு ஒரே குரலில் ஓங்கார முழக்கம் புரிவதைப் பாரீர், அந்த இன உணர்ச்சியும் இரத்த பாசமும் நம் இனத்திற்கும் வேண்டாமோ கூறீர்" என்று நாம் ஏதோ அந்த இன உணர்ச்சி அற்றிரு

கிறோம் என்றெண்ணிக்கொண்டு நம்மைப் பார்த்துக் கேட்டபோதும், "முடியாது முடியாது! இனி ஒருக்காலும் ஏமாற முடியாது, ஏமாந்ததெல்லாம் போதும், இனி அந்த சூது மார்க்கத்தவரின் சுரண்டல் இயந்திரத்தில் சிக்கமாட்டோம்" என்று அவர்கள் உரத்த குரலில் சூள்உரை புகன்றபோதும் திராவிடர் கழகமே இனி அழிந்தாலும் கவலையில்லை, பெரியாரும் அண்ணாவும் பாரதிதாசனும் புவியிலிருந்து மறைந்தாலும் கவலையில்லை, நெடுஞ்செழியன்களையும் அன்பழகன்களையும் ஜனார்த்தனங்களையும் நாம் இனி இழந்துவிட்டாலும் கவலையில்லை, காங்கிரசிற்குள்ளேயே ஒரு திராவிடர் கழகம் தோன்றிவிடும், இனி ஜெயமுண்டு பயமில்லை மனமே என்ற உணர்ச்சி கூட்டத்தில் கூடியிருந்த திராவிடக் கழக நண்பர்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலேயும் ஊடுருவிப் பாய்ந்தது எனில் அது இட்டுக்கட்டி உரைத்த கற்பனை மொழியும் ஆகாது; சொல் நயம் கருதிப் புகன்ற உயர்வு நவிற்சி அணியும் ஆகாது; உண்மை உரையே ஆகும்!

13-2-49 ஞாயிறு மாலை ஜலந்து மைதானத்தில் கூடிய அந்தக் கூட்டத்தில் வீரமுழக்கம் செய்த காங்கிரஸ் எம். எல். ஏக்கள் மட்டுமா, அதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னால் கோகலே மன்றத்தில் பேசிய தோழர் ராஜாராம் எம். எல். ஏ, ஈஸ்வரன் எம். எல். ஏ., லட்சுமி பாரதி எம். எல். ஏ: [நாவலர் பாரதியாரின் திருமகளார்] ஆகியோர் பேச்சுகளும் இதே முடிவைத்தான் அளித்தது நமக்கு!

> "வைத்தியநாதய்யர் தும்மினால்கூட உடனே பத்திரிகையில் வருகிறது. அவர் மூச்சுவிட்டால் கூட அவர் இருக்கும் இடத்தைத் தேடிக் கொண்டு பத்திரிகை நிருபர்கள் வருகிறார்கள். அவர் பேசியதைவிட அதிகம் கூறுகிறார் பேசியதாக. அந்த அதிகப் பிரசங்கத்துக்கும் கண் காது மூக்கு வைத்து, பேசியது 75 பகுதியானால் செய்தி வெளியாவது 100 பகுதி என்றாக்கி விடுகிறார்கள் இந்தப் பத்திரிகைக்காரர்கள். ஆனால் நாங்கள் பேசினாலோ ஒத்தைவரிகூட வருவதில்லை. இது ஏன்! இதற்கெல்லாம் காரணம் தினசரிகள் எல்லாம் ஒரு சிறு கூட்டத்தார் கையில் சிக்கிக் கொண்டிருப்பதுதானே அல்லவா? இந்தப் பத்திரிகைகள் ஒழிந்தால் ஒழிய நாம் நல்வாழ்வு பெறுவது என்பது ஆகிற காரியமா?"

என்று **தோழர் ராஜாராம் எம்.எல்.ஏ.,** 11-2-49 மாலை கோகலே மன்றத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கேட்டாரே, அதே கேள்வியை நாம் எத்தனை ஆயிரம் முறை நம் மேடைகளிலிருந்து கேட்டிருக்கிறோம்? **"தேங்காய் பழம் வாங்கிக்கொண்டு கோயில் கட்டிய நாம், தமிழர்கள், கர்ப்பக்கிருகத்திற்கு வெளியே நிற்க, பிராமணர்கள் உள்ளே இருந்துகொண்டு, நம்மை உள்ளே நுழையாதே என்கிறார்களே, இது ஆணவமா அல்லவா?"** என்று ராஜாராம் அவர்கள், அன்று மனம் நொந்து கூறினாரே, அந்த வாசகம், எத்தனையோ முறை, கேட்பவர் சலிப்படையும் அளவுக்கு, நம்மாலே திருப்பித் திருப்பிக் கூறப்பட்ட வாசகத்தின் எதிரொலி அல்லவா? **"உண்மையிலேயே இந்த இந்து மதம் காண்பவர் நைகொட்டி நகைக்கும் அளவுக்கு இன்று கேவல நிலை அடைந்திருப்பதற்குக் காரணம் இந்த வைத்தியநாதய்யர் பரம்பரைதானே!"** என்று அவர் அன்று, கொதிப்பேறிய உள்ளத்திலிருந்து சூடேறிய வார்த்தைகளை அந்தப் பரம்பரையின் பரம்பரைத் திமிராலே நொந்து கிடக்கும் திராவிட மக்கள் உள்ளத்தின் முன் எடுத்து வைத்தாரே, அதே பணியை நாம் எத்தனை முறைமட்டுமல்ல, எத்தனை ஆண்டுகளாகச் செய்து வந்திருக்கிறோம், அதுவும் எத்தனை ராஜாராம்களின் கேலிக்கும் கிண்டலுக்கும் எதிர்ப்புக்கும் பழிப்புக்கும் நடுவே! கிட்டத்தட்ட கால் நூற்றாண்டு காலமாக நாம் பலத்த எதிர்ப்புக்கிடையே சொல்லிவந்த வாசகங்களை, இன்று, நம்மை எதிர்த்துவந்த கூட்டத்தாரிலேயே செல்வாக்கும் சட்டசபைப் பதவியும் படைத்த பலர் வெளிப்படையாக, பல்லாயிரவர் திரண்டுள்ள பெருங் கூட்டங்களில், ஒளிவு மறைவு இன்றி கூறுகிறார்கள் என்பதைக் கண்டால் நம் நெஞ்சு மகிழ்ச்சியடைவது தவறா?

கோகலே மன்றக் கூட்டத்தில் தோழர் ராஜாராமுக்குப் பிறகு பேசிய **தோழர் ஈஸ்வரன் எம்.எல்.ஏ.,**

> "இந்த மசோதாவால் இந்து மதத்தின் அடிப்படை உரிமைகள் பறிபோகின்றன என்று கற்றறிந்த பார்ப்பனர்களும கதறுகின்றனரே! இந்த அடிப்படை உரிமைகள் யாவை? ஐந்து சத விகிதம் உள்ள ஒரு கூட்டம் மிச்சம் 95 சத விகிதமுள்ள மக்கள் மீது ஆதிக்கம் புரிவது தானே இந்த அடிப்படை உரிமைகளின் அடிப்படை? இது நியாயமா? இந்த 95 சத விகித மக்கள் கடவுள் பெயராலும் மதத்தின் பெயராலும் 5 சத விகித மக்களால் சுரண்டப்பட்டு வருகின்றனர், அதே நேரத்தில் அவர்கள் எழுத்து வாசனை அற்றவர்களாகவும் வைக்கப்பட்டுள்ளனர். நாட்டில் இன்று நடப்பில் இருந்துவரும் இந்துமதம் இதுதானே? இந்த இந்துமதத்தைக் காப்பாற்றுவதற்குத்தானா வைத்தியநாதய்யர்கள் இப்படி அலறித் துடிக்கின்றனர்?"

என்று அஞ்சாமல் நிமிர்ந்து நின்று பேசியதும், அடுத்துப் பேசிய தோழியர் **லட்சுமி அம்மையார்** M. L. A.,

> "இந்துமதக் கோயில்களும் மடங்களும் இன்று இருக்கும் கேவல நிலைமை நம்மை இந்து மதத்தைவிட்டு விரட்டுவதாகவும், அல்லாவிட்டால் எந்த மதமும் தேவையில்லை என்ற முடிவுக்குத் துரத்துவதாகவும் இருக்கிறதே என்பதைக் காணக் காண சிறந்த சமயப்பற்றுதல் படைத்த என் உள்ளம் துடிக்கிறதே"

என்று வேதனை நிரம்பிய மொழிகளைப் புகன்றதும், சென்ற 25 ஆண்டுகளாக நாட்டிலே சுயமரியாதை இயக்கம் செய்துவந்த சூறாவளிப் பிரசாரத்தை நம் மனக்கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறதா, இல்லையா?

ஜலந்து மைதானக் கூட்டத்திலும் கோகலே மன்றக் கூட்டத்திலும் பேசிய காங்கிரஸ் திராவிட எம். எல். ஏ-க்கள் மட்டுமல்ல, சென்னை சட்டசபையில் இம் மசோதாவை ஆதரித்துப் பேசிய எல்லா எம். எல். ஏ-க்களுமே, தங்கட்குத் தெரிந்தோ தெரியாமலோ திராவிடர் கழகப் பிரசாரத்தையே செய்திருக்கின்றனர்! தெரிந்து செய்தவர்கள், நம் பாராட்டுக்குரியவர்கள்! தெரியாமல் செய்தவர்களிலே இரண்டு வகையினர் உண்டு; ஒரு சாரார், தங்கள் பேச்சு திராவிடர்

கழகத்துக்கு ஆக்கம் தருவது என்பது தெரிந்தால் அந்தப் பேச்சை மாற்றிக்கொள்ளத் தயங்காதவர்கள் —அவர்கள் நம் அனுதாபத்திற்கு உரியவர்கள்! மற்றொரு சாரார், அந்த உண்மை தெரிந்தாலும் கூட தங்கள் உள்ளக் கருத்தை ஒளிக்காமல் உரைக்கத்தக்க நெஞ்சு உறுதியும் நேர்மைப் பண்பும் படைத்தவர்கள் —அவர்கள் நம் மகிழ்ச்சிக் குரியவர்கள். இன்றில்லாவிட்டாலும் நாளை, நாளையில்லாவிட்டாலும் பிறிதோர் நாள் கருஞ்சட்டை அணிய இருப்பவர்கள்! இந்த மூத்திறத்து எம். எல். ஏ-க்களின் நிலையும் நினைப்பும் எத்திறத்ததாக இருப்பினும், இவர்களின் சட்டசபைச் சொற்பொழிவுகள் பொதுவாக நம் கழகத்திற்குப் புதிய பலம் தருவதாகவும், சிறப்பாக நம் கழக இலட்சியங்களைப் புது வட்டாரங்களில் அறிமுகப்படுத்தி வைக்கும் அரிய பணியை ஆற்றுவதாகவும் உள்ளன! அந்த அளவுக்கு நாம் இவர்கள் அனைவருக்குமே நன்றிசெலுத்த வேண்டியதுதான்!

"மதம் என்றால் என்ன? மதம் என்றால் முடிந்த வரை சுரண்டுவது என்றுதான் அர்த்தமா? மதம் என்றால் அறநிலைய சொத்துகளைச் சூறையாடுவது என்றுதான் அர்த்தமா? மதம் என்றால், நம் முன்னோர்கள் தர்மசிந்தனையுடன் வைத்துவிட்டுப்போன தர்ம சொத்துக்களையும் நிலையங்களையும் கடவுள் பெயரால் மோசமாக நிர்வகித்து சீர்கேடு உறச்செய்வது என்றுதான் அர்த்தமா? மதம் என்றால் ஏராளமான சொத்துக்கள் இருந்தாலும் எத்தனையோ கோவில்களில் அர்ச்சனை அபிஷேகம் பூசைகள் முதலியன நடத்தப்படாமல் இருக்கும் இழிநிலையைத் தடுக்க சர்க்கார் தம் சுண்டுவிரலையும் அசைக்கக்கூடாது என்று அர்த்தமா? மதம் என்றால், கோயில் நிலங்களை குத்தகைக்கு விட்டு, உழவர்களை ஒரு பக்கம் சுரண்டி, கை நிறையக் கொள்ளையடித்து, தங்களுக்குள் தாராளமாகப் பங்கு போட்டுக்கொண்டு, கோயில் பணப்பெட்டியில் ஒரு பைசாகூடப் போகாமல் சிலர் செய்துகொண்டிருப்பதைத் தடுக்கக்கூடாது என்று அர்த்தமா? மதம் என்றால் கடவுள் பெயரால் தென்னை மரங்களை கள்ளுக்கு விட்டு ஏழைகள் குடித்து வறுமையில் உழலுமாறு செய்வது என்றுதான் அர்த்தமா? மதம் என்றால், இவைபோன்ற ஊழல்கள் நம் கண்முன்னால் நடந்து கொண்டிருக்கும்போது, சர்க்கார், கையைக் கட்டிக் கொண்டு, வாயை மூடிக்கொண்டு, உட்கார்ந்திருக்க வேண்டும் என்றுதான் அர்த்தமா? எந்த நாகரிக சர்க்காரும், எந்த பொது மக்கள் சர்க்காரும், மக்கள் நலன் விழையும் எந்த நல்ல சர்க்காரும், இந்தக் கொடுமைகளையெல்லாம் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கமுடியாது."

பிரதமர் ஓமந்தூராரின் சட்டசபைப் பேச்சிலே சிந்திய முத்துக்கள் இவை!

"மிகவும் தூய்மை மிக்கதென்று பெருமிதமாகப் பேசப்படும் இந்த இந்துமதம்தான் எல்லா மதங்களையும்விட மட்டரகமானது என்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளப் பெரிதும் விழைகிறேன். அதிலும் என்னைப் போன்ற பழங்குடி மக்கள் வேதத்தைப் படிக்க விரும்பினாலே எங்கள் காதில் கொதிக்கும் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றவேண்டுமென்று வேதமே சொல்வதாகக் கூறுகிறார்கள். இத்தகைய இந்து மதமும் ஒரு மதமா என்பதே எனக்குப் புரியவில்லை!"

இவை, தோழர் நாகப்பா எம். எல். ஏ. இந்துமதக் கொடுமைகளைக் கண்டு நெஞ்சு புண்ணாகி உரைத்த பொன்மொழிகள்!

"மடாலயங்களின் சொத்தை தவறான வழியில் செலவிட்டு, தங்கள் சுயநலத்திற்கும், காமக் களியாட்டங்களுக்கும், சுகபோகங்களுக்கும் வீண் விரயம் செய்யும் மடாதிபதிகளும் பண்டார சந்நிதிகளும் ஏராளம் என்பதை யாரும் மறுக்க முடியாது. தெய்வீக காரியங்களுக்கு வைத்துள்ள சொத்தை இவ்விதம் துர்விநியோகம் செய்வதை சட்டத்தின் மூலம் தடுக்காமல் நாம் எப்படி சும்மா இருக்கமுடியும்?"

—தோழர் பாகநேரி சாமிநாதன் இதுபோலச் சீறி எழுந்து சட்டசபையில் சிங்க ஏறு என முழக்கமிட்டார்!

"மடாதிபதிகள் செய்யும் அட்டூழியங்கள் சகிக்க முடியாதவை! காவி வேட்டியைக் கட்டிக்கொண்டு சுவாமி என்று சொல்லி பொது மக்களை ஏமாற்றும் போலிச் சாமியார்களுக்காகப் பரிந்து பேசுபவர்களும் இச் சட்டசபையில் இருக்கிறார்கள் என்பதைக் காண மிக வியப்பாக இருக்கிறது! இது எவ்வளவு பாதகமான செய்கை! எனக்கு மட்டும் அதிகாரமிருந்தால், ஒரே சட்டத்தின்மூலம் கோயில்கள் மடங்கள் எல்லாவற்றையும் இடித்துத் தகர்த்துவிடுவேன்; அங்குள்ள சிலைகளையெல்லாம்கூட பெயர்த்து எறிந்து விடுவேன்."

—தோழர் காமேஸ்வரராவ் எம். எல். ஏ. வின் வீர முழக்கம் இது!

"எனக்குத் தெரிந்து எத்தனையோ பெரிய வரலாற்றுப் புகழ்படைத்த கோயில்களில், கடவுள்கள், அவர்களின் பக்தர்கள் என்பவர்களாலேயே பலமுறை பட்டினி போடப்பட்டிருக்கின்றன; கொல்லப்பட்டிருக்கின்றன; சித்திரவதை செய்யப்பட்டிருக்கின்றன; புதைக்கப்பட்டும் இருக்கின்றன. குறிப்பாக திருச்சி அரங்கநாதர் கோயிலில் ஆண்டவன் 26 நாட்களுக்குமேல் பட்டினிபோடப்பட்ட சம்பவம் எனக்கு நன்றாகத் தெரியும். இந்நிலையில் கோயில்கள் இருக்கும்போது, இந்த அறநிலையப் பாதுகாப்பு மசோதா தேவையில்லை என்று யார்தான் தைரியமாகக் கூறிவிட முடியும்?"

—இவை டாக்டர் டி. எஸ். எஸ். இராசன், உணவு அமைச்சர் மசோதாவை முன்மொழிகையில் கூறிய மணிமொழிகள்!

இவைபோன்ற எடுத்துக் காட்டுகளை ஏராளமாகத் தரமுடியும் நம்மால் ஆனால் இதழில் இடமின்மை கருதி இந்த அளவில் நிறுத்திக் கொள்கிறோம். இப்போது கேட்கிறோம் நாம், இவ்வளவு எடுத்துக்காட்டுகளையும் தந்த பிறகு, சென்னை சட்ட மன்றத்தில் திராவிடர் கழக எம். எல். ஏ, ஒருவர்கூட இல்லாமல் இருந்தும் திராவிடர் கழகப் பிரசாரம் அங்கே இவ்வளவு பலமாக நடக்கிறதே, அதுவும் மாற்றுக் கட்சி நண்பர்களாலேயே நமது பிரசாரம் இவ்வளவு மும்முரமாக நடத்தப்பட்டிருக்கிறதே, இது திராவிடர் கழகத்தின் அற்புதமான சாதனையா, அல்லவா?

நமது திராவிடர் கழக இலட்சியங்களின் மேன்மையை, தோழர் வேலுசாமி எம். எல். ஏ, அவர்களின்

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பாக, ஆனால் மிக மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார் அவருடைய சட்டசபைச் சொற்பொழிவில்!

"மத, பொருளாதார, அரசியல் நிலைமைகளில் ஏதாயினும் சீர்திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கும் பொழுதெல்லாம், குறிப்பிட்ட ஒரு பகுதியினர், மதத்துக்கு ஆபத்து என்று கூச்சல் எழுப்புவது என்கின்ற துர்ப்பாக்கிய நிலை இந் நாட்டில் எப்படியோ ஏற்பட்டுவிட்டது.

"பால்மணம் மாறாத பச்சிளங் குழந்தைகளைத் திருமணம் செய்து வைக்கும் கொடுமையை ஒழிப்பதற்காக சாரதா சட்டம் கொண்டு வரப்பட்டபோது மதத்துக்கு ஆபத்து என்று அவர்கள் கூச்சல் எழுப்பினார்கள்!

"கோயில்களில் பொட்டுக்கட்டும் வழக்கம் தொலையவேண்டும் என்பதற்காக தேவதாசி ஒழிப்பு மசோதா வந்தபோதும் இப்படித்தான் மதத்துக்கு ஆபத்து என்று கூக்குரல் போட்டார்கள்.

"ஆலய நுழைவு மசோதா கொண்டு வரப்பட்டபோதும் இதே கூச்சலைத்தான் மீண்டும் எழுப்பினார்கள்.

"ஏதாவது சீர்திருத்தமான மசோதா கொண்டுவரப்படும்போதெல்லாம் இக் கூச்சலை ஒரு சாரார் எழுப்புவது இந்நாட்டில் வழக்கமாகி விட்டது."

சீர்திருத்தத்தை எதிர்ப்பது அந் "குறிப்பிட்ட ஒரு பகுதியினருக்கு" வழக்கமாகிவிட்டது எந்த நல்ல மசோதா வந்தபோதும் அவர்கள் அதை எதிர்த்தேதான் இருக்கிறார்கள் என்பதை வரிசை வரிசையாக ஆதாரத்தோடு எடுத்துக்காட்டிப் பேசி இருக்கிறார் ஓமந்தூரார்! இதையேதான் இன்னும் காரசாரமான நடையில் அழுத்தந் திருத்தமாகப் பொறித்திருக்கிறது சென்னை காங்கிரஸ் ஏடு "பிரசண்ட விகடன்"!

* * *

"ஏற்கனவே உள்ள இந்து அறநிலைப்பாதுகாப்புச் சட்டவிதிகள் அறநிலையங்களைப் போதியபடி பாதுகாப்பதற்குத் தகுதியற்றது என்பதை உணர்ந்து, தற்போது ஆட்சியிலிருக்கும் காங்கிரஸ் மந்திரி சபை, இச் சட்டத்தில் ஒரு புதுத்திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள். இத்திருத்தம், இன்றைக்குள்ள இந்து அற நிலையங்களையும், மடங்களையும் சரியானபடி நிர்வகித்து, ஊழல்களும், வேறுவகைக் கெட்ட செயல்களும் இல்லாதபடி பாதுகாப்பதற்கு உத்தரவாதமளிக்கிறது. மேலும் இது, இவ்வித நிலையங்களை மக்களுக்கு முக்கியமாக இந்துக்களுக்குப் பயன்படும் முறையில் மாற்றுவதற்கும் பயன்படும் என்றும் அறிகிறோம். இம்மசோதா மடாதிபதிகளின் சொத்துக்களையோ, அன்றி மற்றுமுள்ள அறநிலையங்களின் ஒழுங்கு முறைகளையோ குலைப்பது அல்ல என்பதை, இம்மசோதா மீது பேசும் போது அமைச்சர் டாக்டர் ராஜன் சந்தேகத்துக்கு இடமில்லாமல் தெளிவு படுத்தியிருக்கிறார். "இவ்வளவு தெளிவும் விளக்கமும் கொடுக்கப்பட்ட பிறகும்கூட பத்தாம் பசலிப் பேர்வழிகளாயும், சுயநலக் கூட்டமாயுமுள்ள ஒரு சிறு கூட்டம், இந் நல்ல செயலை வழக்கம்போல் எதிர்க்கத் தவறவேயில்லை. எந்த ஒரு நல்ல காரியத்தையும் எதிர்ப்பதுதான் இச்சிறு கூட்டத்தின் வேலையாகும். இது வரலாறு தரும் படிப்பினை மட்டும் அல்ல, நடைமுறை வாழ்க்கையிலும் நாம் கண்டு வரும் உண்மையாகும்."

* * *

பிரசண்டவிகடன் இவ்வளவு தெளிவாக எடுத்துக்காட்டியிருக்கிறான், "அந்தச் சிறு கூட்டம்" மடாலயத் திருத்த மசோதாவை எதிர்ப்பதற்குக் காரணம், மசோதாவில் உள்ள குறைபாடுகள் அல்ல, மசோதாவை எதிர்க்கும் அக் கூட்டத்தாரின் சுயநல சிந்தனையும் பத்தாம் பசலித்தன்மையுமேதான் காரணம் என்பதை! எதிர்ப்பாளர்களின் உள்ளத்திலே இருக்கும் சுயநலச் சூதினை எடுத்துக் காட்டியதோடு திருப்தி அடையவில்லை பிரசண்டவிகடன், "ஏதோ இரண்டொரு பிற்போக்குப் பத்திரிகைகள் எதிர்ப்பதற்காகவும், மதவெறி பிடித்த ஒரு சிறு கூட்டம் மசோதாவை எதிர்த்து வேலை செய்கிறது என்பதற்காகவும் இம் மசோதாவைச் சட்டமாக்கும் பொறுப்பில் இருந்து விலகிக் கொள்ளக் கூடாது" என்று சென்னை சர்க்காருக்குப் புத்திமதியும் கூறுகிறான்.

பிரசண்டவிகடன் சுட்டிக்காட்டிப் பேசுகின்ற "அந்தச் சிறு கூட்டத்"தாரின் சுயநல சிந்தனைதான், சிந்தனை மட்டுமல்ல அந்தச் சிந்தனையிலே விளைந்த வர்ணாஸ்ரமம் என்னும் சூது நிறைந்த சுரண்டல் திட்டமதான், சுரண்டல் திட்டம் மட்டுமல்ல, அந்தத் திட்டத்தை அரண் செய்வதற்காக அவர்களால் கற்பிக்கப்பட்டுள்ள வேத புராண இதிகாசப் பொய்மைகள் தான், அப் பொய்மைகள் மட்டுமல்ல, அந்தப் பொய்மைகளின் அடிப்படையிலே எழுப்பப்பட்டுள்ள இந்து மதமும், மதக் கட்டுப்பாடுகளும், கட்டுப்பாடுகளின் உருவெளித் தோற்றமான சடங்கு சம்பிரதாயங்களும்தான், தமிழகத்தின் எழிலை இன்பத்தை மேன்மையை முற்போக்கை நீண்டகாலமாகத் தடுத்து வருகிறது என்பதை நாம் பலப்பல ஆண்டுகளாகவே கூறி வருகிறோம். அதே உண்மையை இன்று பிரசண்டவிகடன்களும் பிரதம மந்திரியார்களும் பாலகிருஷ்ணன்களும் கோசல்ராம்—கன்னியப்பன்களும் உணர்ந்திருப்பதையும், உணர்ந்திருப்பதோடு நில்லாமல் உரத்த குரலில் ஊராருக்கும் எடுத்துரைக்க முன் வந்துள்ளதையும் கண்டு நாம் பெரிதும் மனமகிழ்வு அடைவதோடு, இதுபோல இன எழுச்சி மேடையில் அவர்களும் நாமும் சந்திக்கும் சம்பவங்கள் அடிக்கடி நிகழவேண்டும் என்றும் மனமார ஆசைப்படுகிறோம். இப்படி நிகழும் சந்திப்புகள் ஒவ்வொன்றும் ஆரிய ஆணவத்தின் சவப்பெட்டி மீது அடிக்கப்படும் ஒவ்வோர் ஆணி என்பதை நன்கு அறிந்துள்ள நாம் இத்தகு சந்திப்புகள் மீண்டும் மீண்டும் ஏற்படவேண்டும் என்று ஆசைப்படாமல் எப்படி இருக்கமுடியும்?

—

சந்தாதாரர்கட்கு!

—

போர்வாள் சந்தா செலுத்தியுள்ள தோழர்களில், சந்தாத் தொகை முடிந்துபோனவர்கட்கெல்லாம், சென்ற இரண்டு வாரங்களாக, சந்தா முடிந்துவிட்டது என்பதற்கான அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. அறிவிப்பு பெற்றுள்ளவர்கள் அனைவரும் உடனே தம் சந்தாத் தொகையை அனுப்பியுதவ வேண்டுகிறேன்.

மேனேஜர்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

செல்வாக்கை அடைந்தது. உலகப் போரில் ஜப்பான் குதித்தவுடனே, ஜப்பானியக் குள்ளர்களை மட்டந்தட்ட வேண்டிய அவசியத்திற்குள்ளான பிரிட்டனும் அமெரிக்காவும் இந்தப் பணிபுரிய சீனாவையே முக்கியமான தளமாக அமைத்துக்கொண்டன -- எனவே சியாங் திடீரென பெரும் புகழ் அடையலானார். ரூஸ்வெல்ட், ஸ்டாலின், சர்ச்சில் ஆகிய பெருந்தலைவர்களோடு இவரும் ஒருவராக வைத்து எண்ணப்படும் நிலை உண்டாயிற்று. 1943-ல் கெய்ரோவில் நடைபெற்ற ரூஸ்வெல்ட்—சர்ச்சில்—சியாங் கே ஷேக் மாநாடு இவரை புகழ்க் கம்பத்தின் உச்சியில் ஏற்றிவைத்துவிட்டது. மரியாதைக்காக சீனாவை நாற்பெரும் நாடுகளில் ஒன்று என்றும் சியாங்கை நாற்பெரும் தலைவர்களில் ஒருவர் என்றும் அமெரிக்காவும் ரஷ்யாவும் பிரிட்டனும் ஒப்புக்கொண்டன. இந்த சூழ்நிலையிலே தான் "சீனாவே சியாங்! சியாங்கே சீனா" என்ற போலிக் கருத்து புவியெங்கணும் பரவிடலாயிற்று. ஆனால் போருக்குப் பிறகு வல்லரசுகள் பூசிய தங்க முலாம் வெளுத்துவிட்டது, சியாங் தன் சுய ரூபத்திலே காட்சி தரலானார்— "புலி", பழையபடி பூனையாகிவிட்டது; "பெருந்தலைவர் சியாங் கே ஷேக்" சாதாரண சியாங்காக ஆனார்! பிறகு, அதுவும் இல்லை என்றாகிவிட்டது, சீனப் பாட்டாளிகளின் சிக்கக் குரல் இந்தச் சிறுநரியை வீழ்த்திவிட்டது. இன்று, சியாங் ஒரு "மாஜி"! அவ்வளவுதான்!

"சீனாவே சியாங், சியாங்கே சீனா" என்ற கருதது முற்றிலும் தவறானது. சியாங் எந்தக் காலத்திலும் சீனா முழுவதையும் தன் ஆளுகையின் கீழ் கொண்டு வந்தது கிடையாது. அவர் ஆளவந்தாராக ஆனதிலிருந்து "மாஜி ஜனாதிபதி"யாக மாறியவரை உள்ள 25 ஆண்டுகளில் ஒரு நாள்கூட சீனா முழுவதும் அவருடைய சொல்லுக்குக் கட்டுப்பட்டிருந்தது என்று சொல்வதற்கில்லை. முழு சீனாவையும் தன் ஒரே ஆளுகையின் கீழ் கொண்டுவரவேண்டும் என்பதற்காகவே அவர் ஆட்சிப் பீடத்தில் அமரத் தொடங்கிய அந்த நாள் முதல் தப்பி ஓடிய கடைசி நாள் வரை போரிட்டிருக்கிறார்— என்றாலும் அவர் முயற்சி வெற்றி பெறவில்லை. அவர் தொடங்கிய போர் ஒன்றுகூட பலன் தரவுமில்லை. கடைசியில் தோற்றார்— தப்பி ஓடினார் தன் மனைவியோடு!

அவர் வரும்போது போரிடுக் கொண்டே வந்தார் போகும்போது போரிட்டுக்கொண்டே சென்றார்! வரும்போதும் போகும்போதும் மட்டும்தான் போரிட்டுக் கொண்டிருந்தார் என்பதில்லை, சீன நாட்டு சர்வாதிகாரியாக இருந்த நாளெல்லாமும் போரிட்டுக்கொண்டே இருந்தார்! போரிலே தொடங்கி, போரிலே நடந்து, போரிலே முடிந்த ஓர் அரசியல் சரித்திரம் சியாங்-கே-ஷேக்கின் வாழ்க்கை! அமைதி! —அவருடைய அரசியல் வாழ்க்கையில் அது இருந்ததே கிடையாது! சமாதானம்—அவர் அறியாத ஓர் பொருள்! சாந்தம்—அவருக்குத் தெரியாத ஒரு மனநிலை! நல்லாட்சி முறை—அவர் உள்ளத்தை எட்டிப் பாராத தத்துவம்! மக்கள் நலன்—அவருக்குக் கவலையில்லை அதுபற்றி! பாட்டாளிகளின் வாழ்க்கையிலே உள்ள பள்ளம்—அவர் எண்ணிப் பாத்ததுமில்லை அதுபற்றி! போர், போர், போர்! அது ஒன்றுதான் அவருக்குத் தெரியும். போராடினார், போராடினார், போராடினார், போராடிய வண்ணமே அரசியல் வாழ்க்கையை விட்டு மறைந்தார். கண்ணுக்கு எட்டிய மட்டும் போர்க்களமே தெரிந்தது அவருக்கு, பொது மக்கள் வாழ்க்கை தெரியவில்லை, எனவே மக்கள் உள்ளம் அவரை விரும்பவில்லை—அவர் வீழ்ச்சியடைந்தார்!

சியாங்—கே—ஷேக் 62 ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு சாதாரண குடும்பத்திலே பிறந்தவர். அவர் பிறந்தபோது, சீனா, அண்டையில் உள்ள மஞ்சுகோ நாட்டு மன்னர்களின் ஆட்சியில் கிடந்து அடிமை வாழ்வில் உழன்று கொண்டிருந்தது. மஞ்சுகோ மன்னர்கள் சீன மக்களை ஆடுமாடுகள் போல் எண்ணி அவல வாழ்வுக்கு உள்ளாக்கி வந்தனர். அந்நாளில் சீனர்கள் தலைநிமிர்ந்து நடக்கமுடியாது; தம்விருப்பம்போல் வாழமுடியாது; சுதந்தரத்தின் இன்பத்தை, சுவையை, சிறிதும் நுகரமுடியாது. மஞ்சுகோ மன்னர்களின் கொடுமை ஓர் புறத்திலே என்றால் சீனச் சீமான்களின் செருக்கும் நிலப்பிரபுக்களின் காமாந்தகாரக் கோலாகலங்களும் மற்றோர் புறம்; லஞ்சம், ஊழல் பித்தலாட்டம் முதலிய பண்புகளிலேயே நீந்திக் கிடக்கும் சர்க்கார் அலுவலர்களின் நெஞ்சழுத்தம் இன்னோர் புறம்— இந்த முப்புறத் தாக்குதல் சீன மக்கள் வாழ்க்கையை சிறுகச் சிறுகச் சிதைத்துக்கொண்டிருந்தது அந்நாளில். மக்கள் உள்ளம் இந்தக் கொடுமைகளைக் கண்டு குமுறிக் கொந்தளித்துக்கொண்டிருந்த நேரத்திலேதான் சியாங் பிறந்தார். மஞ்சுகோ மன்னர்களின் மதோன்மத்தவாழ்வை எதிர்த்து புரட்சிப் புயல் எழுப்பிய மாவீரர் டாக்டர் சன்—யாட்—சென்னை, சியாங், தம் இளம்வயதிலேயே சந்திக்கும் பேறு பெற்றார். 1911-ல் சர்க்கார் துருப்புகள் மஞ்சுகோ மன்னனை எதிர்த்து புரட்சி செய்தன. உடனே ஜப்பானில் மறைவாக வாழ்ந்துவந்த சன்—யாட்—சென் சீனாவுக்குப் பறந்தோடிவந்தார், புரட்சித்தீயை வளர்த்தார், மன்னர் ஆட்சி மடிந்தது, மக்கள் ஆட்சி மலர்ந்தது. 1912-ல் சன்—யாட்—சென் தலைமையில் சீனக்குடியரசு உதயமாயிற்று. இந்தக் குடியரசு அமைப்பிலும் சியாங்—கே—ஷேக் பெரும்பங்கு கொண்டார். டாக்டர் சன்யாட் சென்னுக்கு அருந்துணையாக இருந்தார்.

மன்னர் ஆட்சி மடிந்ததே தவிர வடசீனாவில் பழைய சேனாதிபதிகள் பலர் அங்கங்கே பல வட்டாரங்களைத் தம் ஆட்சியின்கீழ் நிறுத்திக்கொண்டு சீனக் குடியரசுக்குத் தலைவணங்க மறுத்தனர். குடியரசை நிலைநிறுத்த வேண்டுமானால் அந்த வடக்கத்திய சேனாதிபதிகளை அடக்கியாக வேண்டும் என்பதை நன்குணர்ந்த மாவீரர் சன் யாட் சென் அந்தப் பெரும்பணியிலே முழுமூச்சாக ஈடுபட்டிருந்தார். அதே நேரத்தில் சன் யாட் சென் சீனர்கள் வாழ்க்கையை கவ்விக் கொண்டிருந்த மூடநம்பிக்கைகளை முறியடிப்பதிலேயும் பழங்கால அடிமைத் தத்துவங்களை ஒழித்துக் கட்டுவதிலேயும் தமக்கிருந்த ஆர்வத்தைச் சிறிதும் குறைத்துக் கொண்டாரில்லை. பொருளாதாரத் துறையில் சமதர்ம ஆட்சியை

தேவை என்பதை அவர் அழுத்தந் திருத்தமாக எடுத்துக் கூறிவந்தார். தம்முடைய அரசியல் சமுதாய பொருளாதார இலட்சியங்களை நடைமுறையில் கொண்டுவருவதற்காக "**கோ-மின்-டாங்**" என்னும் பெயருடைய தேசியக் கட்சி ஒன்றை அவர் அமைத்தார். அந்தக் கட்சி, **சமதர்மம், தேசீயம், ஜனநாயகம்** என்னும் மூன்று அடிப்படைகளின்மீது எழுப்பப்பட்ட மக்கள் மாளிகை என்று அவர் அடிக்கடி கூறிவந்தார். அந்த மூன்று உன்னத இலட்சியங்களுக்காகவே அவர், சீனக் குடியரசை அமைத்த பிறகு உயிர் வாழ்ந்த 12 ஆண்டுகளையும் செலவிட்டார்.

1924-ல் புரட்சி வீரர் சன் யாட் சென் மறைந்தார். உடனே சியாங்-கே-ஷேக் கோமின்டாங் கட்சிக்கும் சீனக் குடியரசுக்கும் தலைவரானார், புதிய சீனாவின் தந்தை என்று சீனர்கள் பூரிப்புடன் புகழ்ந்துரைக்கும் டாக்டர் சன்-யாட்-சென்னுடன் நெருங்கிப் பழகியவர் சியாங்-கே-ஷேக், பல போராட்டங்களில் அவருடன் தோளுடன் தோள் கோத்து நின்றவர். எனவே, சீனா, சியாங் கே ஷேக்கை சன்-யாட்-சென்னின் ஆத்மீக வார்சு என்று எண்ணிக் களித்தது. அவர் பதவிக்கு வந்ததை மகிழ்ச்சியுடன் வரவேற்று, முற்றிலும் அவர் பொருத்தமானவர் என்று எக்காளமிட்டது. ஆனால் அந்த மகிழ்ச்சியும் எக்காளமும் பூரிப்பும் நிலைக்கும் விதத்திலே சியாங் நடந்துகொள்ளவில்லை. மக்கள் தலைவராக அவர் வாழவில்லை. அவர் வருகையைக் கண்டு வெண்பா பாடிய வாய்கள், வெகு விரைவில், "என்று ஒழிவான் இந்த எதேச்சாதிகாரி?" என்று சபிக்கத் தொடங்கிவிட்டன. "தலைவரே வருக! தீரரே வருக!" என்று கீதம் இசைத்த குரல்கள் ஒரு சில ஆண்டுகளுக்குள்ளாக "முதலாளித்துவக் காவலனே ஒழிக! பாசிஸ்ட் தலைவனே ஒழிக" என்று இடிமுழக்கம் எழுப்பத்தொடங்கிவிட்டன. "வந்துவிட்டார் எம் வீரர்!" என்று களித்துக் குதித்துக் கூத்தாடிய உள்ளங்கள் "முதுகெலும்பற்ற இந்த எடுப்பார் கைப்பிள்ளை தொலைக" என்று வெறுத்துச் சபித்து கனல்மொழி வீசத் தொடங்கிவிட்டன. டாக்டர் சன்-யாட்-சென் வகுத்த சமதர்மப் பாதையை மறந்து, சியாங், பாசிசப் பாதையிலே நடந்து செல்லலானார் — எனவே பண்டைப் புகழ் படைத்த சீன நாட்டுக்கோர் அவமானச் சின்னமானார்!

சியாங், பதவிக்கு வந்தபோது, வடக்கத்திய சேனாதிபதிகளின் கொட்டம் இன்னமும் அடங்காமல்தான் இருந்தது. எனவே சியாங் ஆட்சிப் பீடத்தில் ஏறும்போதே போர் முரசு கொட்டிக்கொண்டேதான் ஏற முடிந்தது. வடக்கே தனித்தனி வட்டாரங்களை நிறுவிக்கொண்டு தனி ஆட்சி புரிந்துகொண்டிருந்த சேனாதிபதிகளுடன் அவர் போராடிக் கொண்டிருந்தபோது நாட்டில் புதியதோர் கட்சி உருவாகிற்று — குங்-சான்-டாங் கட்சி! **குங் சான் டாங்**, சீன நாட்டுப் பொதுவுடமை இயக்கம், பாட்டாளிகளின் எழுச்சிக் குரல்!

சியாங், வடக்கத்திய சேனாதிபதிகளை முற்றிலும் அடக்கிவிட்டு, "இனி கவலையில்லை! சீனா முழுவதும் ஒரே ஆட்சியின் கீழ் வந்துவிட்டது! இனி, சீனா, நம் காலடியில்! ஓய்ந்திருக்கலாம் இனிமேல், போர்க் கருவிகளுக்கும் ஓய்வு தரலாம்" என்று எண்ணிக்கொண்டே தலைநகரத்திற்குத் திரும்பினார். திரும்பியதும்தான் அவருக்குத் தெரிந்தது **குங்-சான்-டாங்** என்ற புரட்சி இயக்கம் வேகமாக வளர்ந்துவருகிறது, அதனை ஒடுக்கியாக வேண்டிய மகத்தான பணி தனக்காகக் காத்துக்கொண்டுஇருக்கிறது என்னும் புதிய உண்மை! இந்த உண்மை புலப்பட்டதும் சியாங், குங்-சான்-டாங் மீது சீறிப்பாயலானார். பட்டாளங்களை அந்த இயக்கத்தவர் மீது ஏவலானார். போர், இரு சாராருக்குமிடையே பலமாக மூண்டுவிட்டது.

டாக்டர் சன் யாட் சென், சமதர்மம், தேசீயம், ஜனநாயகம் என்னும் மூன்று உன்னதமான இலட்சியங்களை சீன நாடெங்கணும் பவனி வரச் செய்வதற்காக கோமின்-டாங் கட்சியைத் துவக்கினார்! ஆனால் அது சியாங் கே ஷேக் காலத்தில் கடைந்தெடுத்த பாசிஸ்ட் ஸ்தாபனமாக உருமாறிவிட்டது. சமதர்ம வாடையை வீச எழுப்பிய அந்தச் சிறந்த இயக்கத்தை, சியாங், முதலாளித்துவத்தை நிலைநாட்டுவதற்கான அரிய ஆயுதமாகப் பயன் படுத்திக்கொண்டார். ஜனநாயக இலட்சியத்தையோ முற்றிலும் மறந்தார். நாட்டிலே தன்னுடைய கோமின் டாங் ஒன்றைத் தவிர வேறு கட்சிகளே இருக்கக்கூடாது என்று சட்டம் பிறப்பித்துவிட்டார். பொதுவுடமைக் கட்சியாகிய குங்-சான்-டாங்கில் உறுப்பினராகச் சேர்பவர்கட்கு மரண தண்டனை விதிக்கப்படும் என்பதுபோன்ற பயங்கரமான சட்டங்களை ஒவ்வொன்றாக அள்ளி வீசினார் சியாங்—எனவே எதிர்ப்பு அவருக்கு சண்டமாருதம் என எழுந்ததில் சிறிதும் வியப்பில்லை.

சீனா, 50 கோடி மக்களையும் 45 லட்சம் சதுர மைல் பரப்பும் கொண்ட மிகப் பரந்த நாடு. இந்தியா, பாகிஸ்தான் இந்த இரண்டு நாடுகளிலும் வாழும் மக்கள் தொகையைவிட அதிகம் சீன மக்கள் எண்ணிக்கை. இவ்வளவு பெரிய நாட்டில் மிகச் சிறிய கட்சி கோமின்டாங் — அதன் உறுப்பினர்களின் எண்ணிக்கை 20 லட்சம்தான்! 50 கோடி மக்கள் நிறைந்த நாட்டிலே இந்த 20 லட்சம் பேர் கொண்ட சிறு கட்சியின் தலைவர் சியாங் கே ஷேக். கட்சி, அவரை நாட்டுத் தலைவராக்கிற்று. வேறு சட்டபூர்வமான தேர்தலோ, ஒழுங்காக அமைக்கப்பட்ட சட்டசபையோ, மக்கள் பிரதிநிதிகளால் ஆளப்படும் குடியாட்சி முறையோ சீனாவில் கிடையாது. சியாங்-கே-ஷேக் தான் சர்க்கார்! சட்டசபை! மந்திரி சபை! ஜனாதிபதி! சகலமும்! நாட்டிலே வேறு கட்சிகளோ இருக்கக்கூடாது! இருக்கின்ற ஒரே ஒரு மாற்றுக்கட்சியான பொதுவுடமைக் கட்சியில் சேர்பவர்கட்கோ மரண தண்டனை! இந்நிலையில் புரட்சிப் புயல் எழாமல் இருக்குமா? எழுகின்ற புயல் வளராமல்தான் இருக்குமா?

புயல்—புரட்சிப்புயல் — சியாங் கே ஷேக்கினுடைய பாசிச சர்க்காரை எதிர்த்து எழுந்த சண்டமாருதப் புயல் வளர்ந்தது; மடமடவென வளர்ந்தது, மேலும் மேலும் வளர்ந்தது. புயல் வீசிற்று; சுழன்று வீசிற்று; சுழன்று சுழன்று வீசிற்று. வீசிய பெரும் புயலில் சிக்கிச் சிதைந்தன முதலாளித்துவக் கோட்டைகள், இடிந்து நொறுங்கின நிலப்பிரபுத்துவ மாட

மாளிகைகள், சுருண்டு மடிந்தன சீமான்களின் கொட்டமும் கொடுமையும் செருக்கும் இறுமாப்பும்! அசையாத பெரு மலைகளையும் வேரோடு பிடுங்கி எறிந்த இந்தப் பலத்த சண்டமாருதத்தின் முன்னே சியாங் கே ஷேக் மட்டும் நிலைபெற்ற சிலைபோல நின்று கொண்டிருந்தார், 25 ஆண்டுகளாக! அவரும் அடியற்ற மரம் போலச் சாய்ந்து வீழ்ந்தார் மூன்று வாரங்களுக்கு முன்னால்!

சீனா, ஒரு கழனிக்காடு! வயல்கள் நிறைந்த பூமி, நூற்றுக்கு எண்பது பேருக்கு மேல் சீனர்கள், உழு தொழிலையே நம்பவாழ்பவர்கள். இவர்களே சீன நாட்டிற்கெல்லாம் உணவளிப்பவர்கள். ஆனால் இவர்கட்கு உணவளிப்பவரோ யாரும் இல்லை என்று கூறத்தக்க நிலையில் இவர்கள் இருந்தனர். இவர்கட்குச் சொந்த நிலம் கிடையாது; கூலிக்கு உழுபவர்கள்; கூலியோ இவர்கள் வாழ்க்கைக்குப் போதுவதில்லை; கடன்பளு ஏராளம்; கடன் கொடுக்கும் சுடுநெஞ்சர்கள் வட்டிக்காக இவர்கள் இரத்தத்தை உறுஞ்சும் உலுத்தத்தனத்திற்கோ அளவில்லை. லஞ்சம் வாங்குவதில் கைதேர்ந்த உயர்தர அதிகாரிகளின் கழுத்தறுப்பு ஒரு பக்கம். இந் நிலையில் உள்ள சீன உழவர்கட்கு வாழ்க்கையே ஒரு சுமை. இவர்கள் இந்த நிலையிலிருந்து மாறுவதற்கு ஏதேனும் ஒரு வழி இல்லையா என்று ஏங்கித் தவித்துக் கொண்டிருந்தார்கள். அந்தத் தவிப்பைப் போக்க பொதுவுடைமைக் கட்சி முன்வந்தது. எனவே உழவர்கள் ஆயிரம் ஆயிரமாக பொதுவுடமைக் கட்சியில் குதித்திடலாயினர். சியாங் கே ஷேக் அந்தக் கட்சியை சட்ட விரோதமானது என்று அறிவித்து விட்டார். எனவே ஆயுதபலத்துடன் கட்சி வளரலாயிற்று.

பலம்பொருந்திய சர்க்காரின் எதிர்ப்பு, சட்ட பூர்வமான அனுமதி மறுப்பு, அதிகார பலம் ஏதும் இன்மை, வெளிப்படையாக வேலை செய்யமுடியாத தொல்லை—இவ்வளவு தடைச் சக்திகளையும் மீறிக் கொண்டு, குங்-சான்-டாங் கட்சி [பொதுவுடைமை கட்சி] சியாங் கே ஷேக்கை பதவியிலிருந்து விரட்டும் அளவுக்குப் பலம் பெற்றுவிட்டது என்று சொன்னால் இது உண்மையில் ஆச்சரியப்படத்தக்கது. இவ்வளவு பலம் குங்-சான்-டாங் கட்சிக்கு ஏற்பட்டதன் உண்மைக் காரணம் அந்தக் கட்சியின் பெயரிலேயே அடங்கியிருக்கிறது. குங்-சான்-டாங் என்றால் **உற்பத்தியில் பங்கு தரும் கட்சி** என்று பொருள்; அதாவது உழவர்கட்கு அவர்கள் உற்பத்தி செய்த உண்பொருளில் பங்கு தருகின்ற, பங்கு கிடைப்பதற்கான முறையில் சமூகத்தை மாற்றி அமைக்கின்ற கட்சி என்று அர்த்தம்!

சியாங்-கே-ஷேக்கின் துருப்புகளைத் தோற்கடித்து, தங்கள் ஆட்சியை நிலைநாட்டும் இடத்திலெல்லாம், குங்-சான்-டாங் கட்சியினர் செய்யும் முதல் காரியம், நிலப் பிரபுக்களிடம் ஏராளமாகக் குவிந்து கிடக்கும் நிலங்களைப் பறிமுதல் செய்து, ஏழை உழவர்கட்கெல்லாம் அவற்றை விநியோகம் செய்வது என்பதுதான்! இந்தக் காரியம்தான் அவர்கட்கு இவ்வளவு அபாரமான செல்வாக்கை சீனாவில் தேடித் தந்திருக்கிறது.

நிலங்களை உழவர்கட்கு விநியோகிப்பதோடு நில்லாமல், பொதுவுடமைக் கட்சியினர், அவர்கள் உற்பத்தி செய்யும் பண்டங்களை விற்பதற்கான கூட்டுறவுக் கழகங்கள் அமைக்கிறார்கள்; குறைந்த வட்டியில் கடன் தருவதற்கான அமைப்புகள் ஏற்படுத்துகிறார்கள்; வட்டிக்காகச் சுரண்டும் கூட்டத்தாரை ஒடுக்குவதற்கான சட்டங்களை நிறைவேற்றுகிறார்கள்; உழவர்கள் தொழிலாளர்கள் ஆகியோரின் கூட்டுப் பஞ்சாயத்தை ஒவ்வோர் ஊரிலும் நிறுவி, தம்மைத் தாமே ஆண்டுகொள்ளும் உரிமையை அவர்கட்குத் தருகிறார்கள்; பெரும் பணக்காரர்களிடம் முடங்கிக்கிடந்த சொத்துக்களை மட்டுமல்ல, அவர்களிடம் திரண்டிருந்த அதிகார பலத்தையும் பாட்டாளி மக்கட்கெல்லாம் வழங்குகிறார்கள். செத்த வாழ்வு வாழ்ந்துவந்த பாட்டாளி மக்களிடையே இவ்வண்ணம் சொர்க்க புரியை அழைத்து வந்து நிறுத்தினால், அவர்கள் அதில் குடியேற ஏன் மறுக்கப் போகிறார்கள். சீனப் பொதுவுடமைக் கட்சி வெற்றிமேல் வெற்றி பெற்று வருவதன் இரகசியம் இதுதான்! சியாங் கே ஷேக், மகத்தான தோல்வியைத் தழுவி, தலைநகரிலிருந்து தப்பி ஓடி, எந்த நாட்டில் தஞ்சம் புகலாம் தன் மனைவியாரோடு என்று உலகப் படத்தைப் புரட்டிக் கொண்டிருக்க வேண்டிய பரிதாபகரமான நிலைக்கு வந்திருப்பதன் காரணமும் இதுவேதான்!

சீனாவுக்கும் ஜப்பானுக்கும் இடையே எட்டு ஆண்டுகள் கடுமையான போராட்டம் நிகழ்ந்தபோது அந்தப் போராட்டத்தில் சீனா சிதைந்துபோகா வண்ணம் அதைக் காப்பாற்றியவர்கள் சீனப் பொதுவுடமைக் கட்சியினரே தவிர சியாங் சர்க்கார் அல்ல. ஜப்பானியரின் பிடியில் சிக்கிக்கொண்ட ஏராளமான பகுதிகளை மீட்ட பெருமை சீனப் பொதுவுடமைக் கட்சியினர்க்கே உண்டு. ஜப்பானிய எதிர்ப்புப் போராட்டத்தின் போது, சியாங் சர்க்காருடன் ஒத்துழைக்கவும் முன்வந்து, சிறப்போரிட்ட அச் செஞ்சேனையின் ஆற்றலைக் கண்டு வியந்த அமெரிக்கர் அந்த சேனையின் 4-வது பட்டாளத்தையும் 8-வது பட்டாளத்தையும், பர்மாவிலும் தாய்லாந்திலும் ஜப்பானியரை எதிர்த்து தாங்கள் நடத்திவரும் போரில் துணை செய்வதற்காக அனுப்புமாறு கேட்டுக் கொண்டனர் — செஞ்சேனைத் தளபதியும் ஒப்புக்கொண்டார் — ஆனால் சியாங் "அது கூடாது" என மறுத்துவிட்டார் —தன்னோடு ஒத்துழைத்த நேரத்திலும் பொதுவுடைமைக் கட்சியினர் மீது அவ்வளவு ஆத்திரம் அவருக்கு! "தற்காலிகமாக ஜப்பானியரை எதிர்ப்பதற்காக சமாதான ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கும் நாம் இருவரும் போருக்குப் பிறகும் சமாதானமாக இருக்கலாம்; நிலையான சமாதானத்திற்கு நாங்கள் தயார்! ஆனால் ஒரே ஒரு நிபந்தனை சீனாவில் ஒரே கட்சி சர்க்கார் மட்டும் இருந்து இன்றைய எதேச்சாதிகார நிலை மாறி, சர்வ கட்சிகளுக்கும் பிரதிநிதித்வம் தரும் சர்க்கார் ஏற்பட வேண்டும். எங்கள் கட்சி மீதுள்ள தடைகள் யாவும் நீக்கப்பட்டு சட்

(5-ம் பக்கம் பார்க்க)

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hon